Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 344/2022 |
| Police station | : | நெல்லிக்குப்பம் P.S |
| Deposition of witness for Prosecution | : | LW4 / PW7 |
| Name | : | கமல் |
| Father Name/Husband Name | : | த/பெ. சேகர் |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 14.10.2025 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜர். ).

<u>முதல் விசாரணை</u>:

நான் எஸ்.கே. பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் மேல்பட்டாம்பாக்கம் மெயின் ரோட்டில் பாலாஜி டிப்பர் அருகே கமல் மர இழைப்பகம் வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் மதியம் சாப்பிட வீட்டிற்கு சென்றுவிட்டு திரும்பி வந்தபோது என் கடைக்கு எதிரே விபத்து நடந்ததாக கூறினார்கள். கொங்கராயனூர் கிராமத்தை சேர்ந்த நபர் அடிப்பட்டுவிட்டதாக கூறினார்கள். யார் விபத்தை ஏற்படுத்தினார்கள் என்று நான்கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். நான்அவர்களிடம் சம்பவத்தை பார்க்கவில்லை என்று கூறியிருந்தேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

சாட்சியை அரசுதரப்பில் பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதின்பேரில் அனுமதியளித்து அ.த.கு.வி.

என்னுடைய தொலைபேசி எண். 9688267271 என்றால் சரிதான். இதை நான் தான் போலிசாரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். போலிசார் விபத்து சம்பந்தமாக விசாரித்தபோது தான் மேற்படி தொலைபேசி எண்ணை கொடுத்தேன். போலிசார் விபத்து நடந்த இடத்தில் வந்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். சாட்சி தனசேகர் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் பக்கத்தில் சலூன் கடை வைத்திருந்தார். இந்த விபத்து நடந்தபோதும் அவர் அங்கு கடை வைத்திருந்தார் என்றால் சரிதான். சம்பவத்தன்று கொங்கராயனூர் கிராமத்தை சேர்ந்த ராஜவேல் என்கிற சந்திரசேகரன் அவர் இரு சக்கர வாகனத்தில் தட்சிணாமூர்த்தி என்பவரை அமர வைத்துக்கொண்டு பாலாஜி மரவாடி எதிரே தெற்கில் இருந்து வடக்கு நோக்கி ரோட்டை கடப்பதற்காக சென்டர் மீடியா அருகே இண்டிகேட்டர் போட்டுக்கொண்டு நின்றிருந்தபோது ஆஜர் எதிரி அவரது இரு சக்கர வாகனத்தை அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் ஒட்டி வந்து ராஜவேல் ஓட்டிய இரு சக்கரவாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரில் பார்த்து போலிசார் விசாரணையில் நடந்த விபரங்களை கூறிவிட்டு தற்போது எதிரி என்னை கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சம்பவத்தின்போது வீட்டிற்கு சாப்பிட சென்றதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. நான் சாப்பிட போய் இருந்தேன் திரும்ப வரும்போது விபத்து நடந்ததாக சொன்னார்கள். கொங்கராயனூர் என்ற ஊர் யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் என் கடையில் இ ருந்தவர்கள் சொல்லி எனக்கு தெரியும்.